(ஆ) 25 ஆண்டுகள் அப்பழுக்கற்ற பணி முடித்த அரசு ஊழியர்களுக்கு ரொக்கப் பரிசு – சான்றிதழ் வழங்குதல் மற்றும் பண்டிகை முன்பணத்தை உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசாங்கத்தின் அடித்தளமாக, அச்சாணியாக, முதுகெலும்பாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் நலன்களைக் காக்கும் வகையில் வீடு கட்டும் முன் பணத்தினை 15 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்சம் ரூபாயாக உயர்த்தியது; பெண் ஊழியர்களுக்கான மகப்பேறு விடுப்பினை மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதமாக உயர்த்தியது; அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கென திருத்தி அமைக்கப்பட்ட புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என பல்வேறு சலுகைகளை எனது தலைமையிலான அரசு வழங்கி வருகிறது.*

நான் முதன்முறை முதலமைச்சராக இருந்தபோது, அதாவது 1996 ஆம் ஆண்டு 25 ஆண்டு காலம் அப்பழுக்கற்ற பணியினை முடித்த அரசு ஊழியர்களுக்கு 500 ரூபாய் மதிப்புள்ள இந்திரா விகாஸ் பத்திரத்தை வழங்கலாம் என்று ஆணையிட்டிருந்தேன். அதன்படி 25 ஆண்டு காலம் பணியாற்றிய அப்பழுக்கற்ற அரசு ஊழியர்களுக்கு அந்தப் பத்திரம் வழங்கப்பட்டு வந்தது. பின்னர், இந்திரா விகாஸ் பத்திரத்திற்குப் பதிலாக கிசான் விகாஸ் பத்திரம் வழங்கப்பட்டு வந்தது. கிசான் விகாஸ் பத்திரம் வழங்குவதை 1-12-2011 முதல் மத்திய அரசு நிறுத்திவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், மத்திய அரசு கிசான் விகாஸ் பத்திரத்தை நிறுத்திவிட்டதைக் கருத்தில் கொண்டும்; 25 ஆண்டு காலம் அப்பழுக்கற்ற பணியினை முடித்த அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது என்பதைக் கருத்தில் கொண்டும்; இந்தத் தொகையை 500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்திடவும்; (மேசையைத் தட்டும் ஒலி) அதனை ரொக்கமாக வழங்கிடவும்; அவர்களது பணியினைப் பாராட்டி அரசு சார்பில் சான்றிதழ் வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2012 நவம்பர் 1] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இதுமட்டுமல்லாமல், தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு 5 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட 2,000 ரூபாய் பண்டிகை முன் பணத்தை 5,000 ரூபாயாக உயர்த்திடவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் அரசு அலுவலர்கள் தங்கள் கடமையை மேலும் செவ்வனே ஆற்ற வழி வகுக்கும் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

(இ) தொழில் முதலீட்டை அதிகரிக்க புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட இருப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துயிர்பெற்று எழுச்சிபெறும் வகையிலும்; நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினைப் பெருக்கும் வகையிலும்; மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையிலும்; இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனும்; *(மேசையைத் தட்டும் ஒலி)* தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

தமிழகத்தை ஒரு திட்டமிட்ட நீண்டகால வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும்வண்ணம், 22-3-2012 அன்று "தொலைநோக்குத் திட்டம்-2023" என்ற திட்ட ஆவணத்தை நான் வெளியிட்டேன். அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் எதிர்பார்க்கப்படுகின்ற மொத்த உற்பத்தி வளர்ச்சியைக்காட்டிலும் 20 சதவிகிதம் அதிகமாக அதாவது, ஆண்டொன்றுக்கான மாநிலத்தின் மொத்த வளர்ச்சி 11 சதவிகிதம் அல்லது அதற்கு மேலாக இருக்க வேண்டும் என்பது இந்தத் தொலைநோக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்தொலைநோக்குத் திட்டத்தினைச் செயலாக்கும் விதமாக கடந்த 14-5-2012 அன்று 5 தொழில் நிறுவனங்களுடன் 5,700 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என் முன்னால் கையெழுத்திடப்பட்டன. *(மேசையைத் தட்டும் ஒலி)* இதன்மூலம் வேலைவாய்ப்பு பெறுபவர்களின் எண்ணிக்கை 9,530 ஆகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY